இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 316 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 11 – திங்கள்கிழமை 26 ஜூன் 2023 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 316: Thiruvalluvar Year - 2054 - Aani 11 - Monday 26 June 2023 - Chennai 8 Pages ₹ 5.00

### சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் முழு உருவ கம்பீரச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 26-**

**முன்னாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு மாநிலக் கல்லூரி வளாகத்தில் முழு உருவ கம்பீரச் சிலை நிறுவப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முன்னாள் பிரதமர், சமூக நீதிக் காவலர், பிற்படுத்தப்பட்ட மக்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்த வி.பி.சிங் அவர் களுக்கு மரியாதை செய்யும் விதமாக, சென்னையில் அவரது முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.4.2023 அன்று சட்டமன்றப் பேரவை விதி110ன் கீழ் அறிவித்தார்.

**பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தவர் வி.பி.சிங்!**

உத்திரப் பிரதேச மாநிலம் அலகாபாத் மாவட்டத்தில் அந்நாளில் பெரும் ஜமீந்தாராக இருந்த ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாக பிறந்த விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள், செல்வ சூழ்நிலையில் வளர்ந்தாலும் அதில் மனம் ஒட்டாமல் சட்டக் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டவர்.



சர்வோதய சமாஜில் இணைந்து பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்து தனது நிலங்களையே தானமாக வழங்கியவர்.

பின்னாளில் உத்திரப் பிரதேச மாநில முதலமைச்சராகவும், ஒன்றிய வர்த்தக அமைச்சராகவும், வெளியுறவுத் துறை அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர் பொறுப்புகளை வகித்தவர். பின்னர் தேசிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கி 1989 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக ஆனார்.

### பிற்படுத்தப்பட்ட மக்களின் கலங்கரை விளக்கம் வி.பி.சிங்!

**மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்தி சமூக நீதியைக் காத்தவர்!**

அவர் பிரதமராக இருந்தது பதினோரு மாதங்கள்தான் என்றாலும், அதற்குள் அவர் செய்த சாதனைகள் மகத்தானவை. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது பட்டியலின, பழங்குடியினருக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு தரப்படவில்லை. இதனை வழங்குவதற்காக B.P. மண்டல் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்திற்கு அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை அமல்படுத்திய சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள்.



தமிழ்நாட்டை தனது இரத்த சொந்தங்கள் வாழும் மாநிலமாக நினைத்த வி.பி. சிங் அவர்கள், தந்தை பெரியாரை தனது உயிரினும் மேலான தலைவராக ஏற்றுக் கொண்டார்.

**கலைஞரை தனது சொந்த சகோதரராக மதித்தவர்!**

ஒரு மனிதனுக்கு சாவை விட மிகக் கொடுமையானது "அவமானம்". இந்த அவமானத்தை துடைக்கும் மருந்துதான் பெரியாரின் "சுயமரியாதை" என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தனது சொந்த சகோதரர் போல் மதித்தவர். தனது ஆட்சியைப் பற்றிக்கூட பொருட்படுத்தாமல், ஒரு கொள்கைக்காக, இலட்சியத்துக்காக என்னோடு இருந்த மாபெரும் தலைவர் கலைஞர் என்று பாராட்டியவர் வி.பி.சிங் அவர்கள்.

அத்தகைய சமூக நீதிக் காவலருக்கு அவருடைய பிறந்தநாளான இன்று, ஏற்கனவே 20.4.2023 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவித்த அறிவிப்பிற்கு இணங்க, சென்னை, மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் பேரவை மற்றும் பேராசிரியர் பெருமக்கள் ஆகியோரது வேண்டுகோளை ஏற்று, அரசு அதனை பரிசீலித்து "சமூக நீதிக் காவலர்" வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் முழு உருவ கம்பீரச் சிலை அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

---

### போதை ஒழிப்பு, சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினத்தையொட்டி

# காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கம் அறிவிப்பு!

## சுதந்திர தினத்தன்று விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஜூன் 26–

2023 ம் ஆண்டு சர்வதேச போதை ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினத்தையொட்டி காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு முதலமைச்சரின் பதக்கம் வழங்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

"தமிழக முதலமைச்சர் அவர்கள் 9.5.2022 அன்று சட்டப்பேரவையில் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை மானியக் கோரிக்கையின்போது "சமூகத்தில் போதைப் பொருளை ஒழிப்பதற்காக கடுமையாகவும், உண்மையாகவும் உழைக்கும் அதிகாரிகள் / காவலர்களை ஊக்குவிப்பதற்கென முதலமைச்சரின் பதக்கம் புதிதாக வழங்கப்படும் என அறிவித்தார். அதனை தொடர்ந்து அரசாணை எண் 411, உள்( மிக)த் துறை, நாள் 03.08.2022 அன்று வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக காவல் துறை தலைமை இயக்குநரின் பரிந்துறைக் கேற்ப கீழ்க்கண்டகாவல் அதிகாரிகள்/ஆளிநர்களுக்கு முதலமைச்சரின் பதக்கம் வழங்கப்படுகிறது"

வெ.பத்ரிநாராயணன் (காவல் கண்காணிப்பாளர், கோவை மாவட்டம்). டோங்கரே பிரவின் உமேஷ், (காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம்) மா.குணசேகரன், (காவல் துணை கண்காணிப்பாளர், இருப்பு பாதை, சேலம் உட்கோட்டம்). சு.முருகன், (காவல் சார்பு ஆய்வாளர், நாமக்கல் மாவட்டம்), இரா.குமார், (முதல் நிலை காவலர் 1380, நாமக்கல் மாவட்டம்).

போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் அஸ்ரா கர்க், (காவல் துறைத் தலைவர், தென் மண்டலம், மதுரை), சீரிய பணியை அங்கீகரித்து அவர்களுக்கு ரொக்கப் பரிசு இல்லாமல், இந்த "சிறப்பு பதக்கம்" தனி நேர்வாக வழங்கப்படுகிறது.

அஸ்ரா கர்க், அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு மிகுந்த கண்காணிப்பின் மூலம் போதை மருந்துகள் மற்றும் மனநோய் பொருள்கள் சட்டம், (NDPS Act) சட்டத்தின் கீழ் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. மூத்த அதிகாரிகளுக்கு அவர் பயிற்சி அளித்துள்ளார் மற்றும் 2022–2023ல் 1843 நபர்கள் பிணைக்கப்பட்டுள்ளனர். இது சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்கியது.

**வெ.பத்ரிநாராயணன்** (காவல் கண்காணிப்பாளர், கோவை மாவட்டம்), போதை பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளினால், போதை பொருட்கள் இல்லாத கோவை மாவட்டத்தை உருவாக்க சீரிய முயற்சிகள் எடுத்துள்ளார். இம்மாவட்டத்தில் இவருடைய தீவிர முயற்சிகளின் காரணமாக 128 கல்லூரிகளில் போதை பொருட்களுக்கு எதிரான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல கோடி மதிப்புள்ள போதை பொருட்கள், புதிய தலைமுறை செயற்கை போதை பொருட்கள், கஞ்சா சாக்லேட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டு மட்டும், போதை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கஞ்சா வியாபாரிகள் பலபேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தில், கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பொதுமக்களை ஈடுபடுத்தியதன் விளைவாக, கோவை மாவட்டத்திலுள்ள 108 கிராம பஞ்சாயத்துகள் கஞ்சா இல்லாத கிராமங்களாக மாற்றப்பட்டுள்ளது.

**டோங்கரே பிரவின் உமேஷ்,** (காவல் கண்காணிப்பாளர் திருச்சி மாவட்டம்), திருவெறும்பூரில் உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய போது, கரூரில் சிறப்பு சோதனை மூலம் நன்கு வளர்ந்த சுமார் 2790 கிலோ எடையுள்ள 3584 கஞ்சா செடிகள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய போது போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மொத்தம் 320 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதில் 10 வணிக வழக்குகளும் அடங்கும். 540 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அதில் 69 குற்றவாளிகள் "போதைப் பொருள் குற்றவாளிகள்" என்று குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு 2,266.9 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 98 பாட்டில்கள் MEPHENTERMINE SULPHATE INJECTION IP கைப்பற்றப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் இது வரை போதைப்பொருள் கடத்தல்காரர்களின் 345 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

**மா.குணசேகரன்** (காவல் துணை கண்காணிப்பாளர் சேலம்) தலைமையில் தனிப்படை அமைத்து இரயில் வண்டிகளில் தீவிர சோதனை மேற்கொண்டதில் "கஞ்சா வேட்டை 2.0" மற்றும் "கஞ்சா வேட்டை3.0" யின்போது கஞ்சா கடத்தலில் தொடர்ந்து ஈடுபட்ட பல குற்றவாளிகளை குண்டர் தடுப்பு சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளார். கடந்த 2022ம் ஆண்டு 1119 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டு 77 குற்றவாளிகளை கைதுசெய்து 131 வழக்குகள் பதிவு செய்துள்ளார்.

**சு.முருகன்,** (காவல் சார்பு ஆய்வாளர், நாமக்கல் மாவட்டம்) மற்றும் **இரா.குமார்,** (முதல் நிலை காவலர் 1380, புதுச்சத்திரம் காவல் நிலையம், நாமக்கல் மாவட்டம்) ஆகிய இருவரும் காவல் கண்காணிப்பாளர், நாமக்கல் மாவட்டம் அவர்களால் காவல் துணை கண்காணிப்பாளர், நாமக்கல் உட்கோட்டம் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படையில் குற்றவாளிகளை அடையாளம் காண அதிக முயற்சி எடுத்து தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் ஆதாரங்களை சேகரித்து ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாவட்டங்களுக்கு பயணம் செய்தும் ஆதாரங்களை திரட்டி அவர்களிடமிருந்து குட்கா பறிமுதல் செய்ய உதவியாக இருந்துள்ளார்கள்.

விருதுகள் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சுதந்திர தின விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### மேற்கு வங்கத்தில்

# 2 சரக்கு ரயில்கள் மோதி விபத்து!

*கொல்கத்தா, ஜூன் 26 -*

மேற்கு வங்கம் மாநிலத்தில் நேற்று காலை 2 சரக்கு ரயில்கள் மோதியதில் 12 பெட்டிகள் தடம் புரண்டு விபத்து நேரிட்டிருக்கிறது.

ஒடிசா மாநிலத்தின் பாலசோர் பகுதியில் நேரிட்ட ரயில் விபத்தின் தாக்கத்திலிருந்து இன்னமும் தேசம் மீளாத சூழலில், மேற்கு வங்க சரக்கு ரயில் விபத்து அதிர்ச்சியை தந்துள்ளது. ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் உள்ள பாஹாநகர் ரயில் நிலையம் அருகே ஜூன் 2 அன்று, 2 பயணிகள் ரயில்கள் மற்றும் ஒரு சரக்கு ரயில் ஆகியவை மோதி தடம்புரண்ட விபத்து நேரிட்டது. இந்த விபத்தில் பயணிகள் ரயில்களில் பயணித்தவர்களில் 294 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



நாட்டையே உலுக்கிய இந்த ரயில் விபத்தின் சுவடு நீங்குவதற்கு முன்பாக, அடுத்த சில வாரங்களிலேயே இன்னொரு ரயில் மோதல் விபத்து நேரிட்டிருக்கிறது. மேற்கு வங்கம் மாநிலத்தின் பாங்குரா பகுதியில், நேற்று (ஜூன் 25) அதிகாலை 2 சரக்கு ரயில்கள் மோதலில் 12 பெட்டிகள் தடம்புரண்டன. சரக்கு ரயில்கள் என்பதால் நல்வாய்ப்பாக உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. சரக்கு ரயில்களின் ஓட்டுநர் ஒருவர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரக்பூர் - பாங்குரா ஆத்ரா வழித்தடங்களில் ரயில் போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. மீட்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும், ரயில் போக்குவரத்து மீளும் என்றும் தென்கிழக்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

# மணிப்பூரில் பதற்றம் நீடிப்பு!

*இம்பால், ஜூன் 26 -*

மணிப்பூரில் ரகசிய தகவல் அடிப்படையில் KYKL ஆயுதம் ஏந்திய போராளிகள் 12 பேரை பாதுகாப்பு படை பிடித்தது. ஆனால், அப்பகுதி மக்கள் சூழ்ந்து கொண்டு பாதுகாப்பு படையினரை நடவடிக்கையை எடுக்க விடாமல் தடுத்தனர்.

மணிப்பூரில் இரு குழுக்கள் இடையேயான மோதலால் கடந்த இரண்டு மாதங்களாக பதற்றம் நீடித்து வருகிறது.

இதனால், அங்கு பாதுகாப்பு படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மணிப்பூரின் கிழக்கு பகுதியில் உள்ள இதம் பகுதியில் கங்லேய் யாவோல் கன்னா லுப் மெய்தி போராளிகள் குழு இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது.

இந்த குழுதான் 2015 ஆம் ஆண்டு டோக்ரா யூனிட்டிற்கு எதிராக தாக்குதல் நடத்தியது. அதுபோக பல தாக்குதல்களை இந்த குழு நடத்தியுள்ளது.

ராணுவத்தினருக்கு இந்த குழுவினர் பதுங்கியிருக்கும் தகவல் ரகசியமாக கிடைத்தது. உடனடியாக இதம் கிராமப்பகுதிக்கு சென்ற ராணுவம் கைது செய்ய முயற்சித்தது. 12 பேரை ஆயுதங்களுடன் பிடித்தது.

ஆனால், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி கிராம மக்கள் ராணுவத்தினரை சூழ்ந்து கொண்டு ராணுவம் தனது நடவடிக்கையை மேற்கொள்ள விடாமல் தடுத்தனர்.

ராணுவம் எவ்வளவோ எடுத்து கூறியும் அந்த கும்பல் கேட்கவில்லை. 1,500க்கும் மேற்பட்டோர் திரண்டு ராணுவத்தை சுற்றி வளைத்தனர். இதனால் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த ராணுவம் சேதம் எதுவும் ஏற்படக்கூடாது என்பதால் போராளிகள் குழுவினரை சேர்ந்த 12 பேரை விடுவித்ததோடு, அவர்களுக்கு எதிரான நடவடிக்கையையும் கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில் மணிப்பூரில் பதற்றம் நீடித்து வருகிறது.